# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

# TENKASI.

**Date : 07.04.2026**

**OS No. : 241/2019**

**Dw : 1**

**Name : திரு. ராமசாமி**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) கடந்த 27.07.2016 அன்று பிராது 3ம் தபசில் சொத்து, வா.சா.ஆ.10 ஆவணம் மூலம் வாதி, 2ம் பிரதிவாதிக்கு அடமான ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அடமான ஆவணத்தில் 3ம் தபசில் சொத்துக்கள் முழுமையாக காட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். 3ம் தபசில் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.4,20,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே தேதியில்தான் மேற்படி அடமான ஆவணம் செல்லடிக்கப்பட்டு அதே தேதியில் வாதி எனது பெயருக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் சொத்தின் மதிப்பு ரூ.12,80,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதன் கிரைய மதிப்பு ரூ.9,00,000/- என குறைவாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தின் மதிப்பு குறைவாக காட்டப்பட்டது சம்பந்தமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வாதிக்கு வட்டிக்கு பணம் கொடுத்துவிட்டு, பத்திர செலவை குறைப்பதற்காகத்தான் சந்தை மதிப்பை விட கிரைய மதிப்பை குறைவாக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

2) என் மனைவியின் கிரைய ஆவணத்தில் கையொப்பமிட்ட சாட்சிகளை யார் அழைத்துவந்தார்கள் என்பது எனக்கு நியாபகமில்லை. அடமான ஆவணம் செல்லடிக்கப்பட்டபோது இருந்த சாட்சிகள்தான் மேற்படி கிரைய ஆவணத்திலும் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் யார் என்பது எனக்கு நினைவில்லை. 3ம் தபசில் சொத்திற்கு செல்வதற்கு எத்தனை வழிகள் உள்ளன என்றால் தற்போது எனக்கு நியாபகமில்லை. 3ம் தபசில் சொத்திற்கு முன்புறம் மட்டும் சிமென்ட் ரோடு உள்ளது, மற்ற பாதைகள் மண்பாதைகளாகும். வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் கதவு எண்.32 கொண்ட வீடு உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு தபசில் சொத்தில் எந்த திசையில் அமைந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வீட்டின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அது எனக்கு நியாபகமில்லை. கிரையத்தின்போது அந்த ஆவணத்தை பார்த்தேனா என்பது எனக்கு நியாபகமில்லை. 3ம் தபசில் சொத்தில் எத்தனை சதுர அடியில் மேற்படி கதவு எண்.32 வீடு அமைந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3) 2ம் பிரதிவாதி ராமசாமியிடம் அடமானம் செல்லடிக்கும் வகையில் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் நான் அவரிடம் பணம் கொடுக்கவில்லை, வாதி சுப்பையாவிடம்தான் கொடுத்தேன். வாதி குடியிருக்கும் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன என்ற விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு இடத்தை கிரையம் முடிக்கும்போது, நேரில் சென்று பார்த்து அதன் அமைப்பு மற்றும் வீடு எத்தனை சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது, காம்பவுண்ட் சுவர் உள்ளதா போன்ற விவரங்களை பார்த்துதான் கிரையம் முடிப்பார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் வில்லங்கம் பார்க்காமல் இடத்தையும் பார்க்காமல் கிரையம் முடித்துவிட்டேன் என்றால் இந்த விவரங்கள் அப்போது எனக்கு தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட மற்றொரு வீட்டை விற்பனை செய்ததன் மூலம் என் கையில் ரூ.9 லட்சம் பணம் இருந்தது. அப்படி

ஒரு வீடு இருந்ததாகவோ, அதனை நான் விற்பனை செய்ததாகவோ காட்டக்கூடிய எந்தவொரு ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளபடி, 30.10.2017 ம் தேதியில் எனது மனைவியும் வாதியும் ஒரு வாய்மொழி வாடகை ஒப்பந்தம் போட்டுக்கொண்டதற்கு எந்த ஆதரவும் இல்லை என்றால் சரிதான். இதுவரை வாதி எங்களுக்கு வாடகை செலுத்திவந்தார் என்பதை காட்டக்கூடிய எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சண்முகையாபாண்டியனுக்கு வாதி பிராது 2ம் தபசில் சொத்தை பொறுத்து ஒரு கிரையம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி இறந்தபிறகு அவரது வாரிசுகள் வாதியின் மகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை பி.வா.சா.ஆ. 2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே எனக்கு மேற்படி பி.வா.சா.ஆ. 2 ஆவணம் குறித்து தெரியும் என்றால் சரிதான். எனவே மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய எதிர் கோருரிமை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சாஆ. 9 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களை ரத்து செய்வதற்கு நான் தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களை பொறுத்து நான் இதுவரை எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது மனைவியின் மூலமாக வாதிக்கு வட்டிக்கு பணம் கொடுத்து பெயரளவில் கிரையம் வாங்கிய காரணத்தினால்தான் மேற்படி வா.சாஆ. 9 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்களை ரத்து செய்வதற்கு இன்று வரை நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் சண்முகையா பாண்டியன் யார் என்பதை நான் விசாரித்து தெரிந்துகொண்டேன். இதுசம்பந்தமாக அவரை

நேரில் சந்தித்து தபசில் சொத்தை பொறுத்து எங்கள் இருவர் பெயரிலும் கிரைய ஆவணம் உள்ளது குறித்து பேசினேனா என்றால் அவரை பார்த்து எனது பெயரிலும் கிரைய ஆவணம் உள்ளது என்று சொன்னேன். நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வாய்மொழி வாடகை ஒப்பந்தம் குறித்த விவரம் எதுவும் பி.வா.சா.ஆ. 13 முதல் 32 வரையிலான ஆவணங்களில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாய்மொழி வாடகை ஒப்பந்தம் மற்றும் வாடகை வசூல் சம்பந்தமாக காவல் நிலையத்தில் எதுவும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் வாதி வீட்டை காலி செய்ய மறுக்கிறார் என்று ஆலங்குளம் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மற்றும் அதன் முடிவுகள் குறித்து எந்தவொரு ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி எனது மனைவியின் பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம், பெயரளவிலான ஆவணம் என்று பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அதனை குறிப்பாக மறுத்து நான் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னிடம் கடன் வாங்கிவிட்டு, அதற்கு ஈடாக 3ம் தபசில் சொத்தை பெயரளவிற்கு எனது மனைவியின் பெயரில் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால்தான் எனக்கு முன்னர் கொடுக்கப்பட்ட கிரைய ஆவணத்தை நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையான கிரையம் எழுதியிருந்தால் நான் சொத்தை நேரில் சென்று பார்த்து வில்லங்கம் எதுவும் உள்ளதா என்பதை விசாரித்து அதன்பின்னர் வா.சா.ஆ. 11 ஆவணம் ஏற்படுத்தியிருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 11 ஆவணம் வாதியால் கிரையம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதிக்கொடுக்கப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. கடனை திருப்பி கொடுக்கும் சமயத்தில் மறு கிரையம் எழுதி கொடுக்க நான் மறுத்துவிட்ட காரணத்தினால்தான் என் மீது வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை

என்றும், வாதியின் வழக்கு பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் நாளது தேதிவரை வாதி அவரது குடும்பத்துடன் வசித்து வருவதிலிருந்தே வா.சா.ஆ. 11 ஆவணம் பெயரளவிலான ஆவணம் என்பது துலங்கும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi